## 12th History Lesson 8 Questions in Tamil

## 8] காலனியத்துக்கு பிந்தைய இந்தியாவின் மறுகட்டமைப்பு

1) வங்காளம் மற்றும் பஞ்சாப் மாகாணங்களை பிரித்தபோது நிகழ்ந்தவைகளில் கீழ்க்கண்டவற்றில் எது சரியானது?

கூற்று 1 – இந்துக்கள் கிழக்கு வங்காளத்தில் இருந்து மேற்கு வங்காளத்திற்கும், இஸ்லாமியர்கள் பீகார் மற்றும் மேற்கு வங்காளத்தில் இருந்து கிழக்கு வங்காளத்தின் இடம்பெயர ஆரம்பித்தனர்.

கூற்று 2 – மேற்கு பஞ்சாப்பில் இருந்த இந்துக்கள் மற்றும் சீக்கியர்கள் கிழக்கு பஞ்சாபிற்கும், கிழக்கு பஞ்சாபில் இருந்த முஸ்லிம்கள் மேற்கு பஞ்சாபிற்க்கும் குடிபெயர்ந்தனர்.

கூற்று 3 – இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான எல்லைப் பகுதியில் அமைந்த கிராமங்கள், அவற்றில் வாழ்ந்த பெரும்பான்மை மதத்தினரை பொருத்துப் பிரிக்கப்பட்டன.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லாமே சரி

2) இங்கிலாந்து பிரதமர் கிளமண்ட் அட்லி எந்த நாளில் பிரிட்டிஷ் அரசாங்கம் 1948 ஜூன் 30 – க்குள் இந்தியாவிற்கு சுதந்திரம் அளித்துவிட்டு இந்தியாவை விட்டு வெளியேறும் என்று லண்டனில் தெரிவித்தார்?

A) 1947, பிப்ரவரி 1

B) 1947, பிப்ரவரி 5

C) 1947, பிப்ரவரி 15

D) 1947, பிப்ரவரி 20

3) வேவல் பிரபுவுக்கு பதிலாக அரச பிரதிநிதியாக(வைசிராயாக) மவுண்ட்பேட்டன் பிரபு நியமிக்கப்பட்ட நாள் எது?

A) 1947, மார்ச் 15

B) 1947, மார்ச் 20

C) 1947, மார்ச் 22

D) 1947, மார்ச் 27

4) மவுண்ட்பேட்டன் பிரபு இந்தியாவிற்கு 1947, ஆகஸ்ட் 15ஆம் நாள் சுதந்திரம் அளிக்கப்படும் என்று எப்போது அறிவித்தார்?

A) 1947, ஜூன் 1

B) 1947, ஜூன் 3

C) 1947, ஜூன் 5

D) 1947, ஜூன் 7

5) இந்தியப் பிரிவினையுடன் கூடிய சுதந்திரத்திற்கான மௌண்ட்பேட்டன் திட்டம் எந்த இடத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது?

A) நாக்பூர்

B) மீரட்

C) ஜான்சி

D) லக்னோ

6) மகாத்மா காந்தி படுகொலை செய்யப்பட்ட தினம் கீழ்க்கண்டவற்றுள் எது?

A) 1947, ஜனவரி 30

B) 1948, ஜனவரி 20

C) 1948, ஜனவரி 30

D) 1949, ஜனவரி 30

7) சுதந்திர இந்தியாவின் உருவாக்கத்தின்போது முன்னின்ற சவால்கள் கீழ்க்கண்டவற்றுள் எது?

I. பிரிவினையை சமாளித்தல்.

II. பொருளாதார திட்டமிடல் மற்றும் கல்விமுறையை சீரமைத்தல்

III. 500க்கும் மேற்பட்ட சுதேச அரசுகளை இந்தியாவோடு ஒருங்கிணைத்தல்.

IV. மக்களால் பேசப்படும் மொழிகள் அடிப்படையிலான வேறுபாட்டை தீர்த்து வைத்தல்

A) I, II, III மட்டும்

B) II, III, IV மட்டும்

C) I, III, IV மட்டும்

D) இவை அனைத்தும்

8) முஸ்லிம் லீக், இந்து – முஸ்லிம் அடிப்படையில் இந்தியாவை பிரிவினை செய்வதற்கான கோரிக்கையை 1940ஆம் ஆண்டு __________ நடந்த மாநாட்டில் தொடங்கி தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

A) நாக்பூரில்

B) லாகூரில்

C) லக்னோவில்

D) பம்பாயில்

9) இந்திய வரைபடத்தை பிரிவினைக்கேற்றவாறு மாற்றி வரைவதற்கு லண்டனிலிருந்து அனுப்பப்பட்டவர் கீழ்க்கண்டவர்களில் யார்?

A) சர் ஜான் கிளிஃப்

B) சர் சிரில் ராட்க்ளிஃப்

C) சர் ஜான் வில்லியம்

D) இவர்கள் யாரும் அல்ல

10) சர் சிரில் ராட்க்ளிஃப் எப்போது இந்தியா வந்தடைந்தார்?

A) 1947, ஜூலை 2ஆம் நாள்

B) 1947, ஜூலை 4ஆம் நாள்

C) 1947, ஜூலை 6ஆம் நாள்

D) 1947, ஜூலை 8ஆம் நாள்

11) சர் சிரில் ராட்க்ளிஃப் தலைமையில் அமைக்கப்பட்ட ஆணையத்தில் எத்தனை நீதியரசர்கள் இணைந்து பணியாற்றினர்?

A) இரண்டு பேர்

B) நான்கு பேர்
C) ஆறு பேர்
D) எட்டு பேர்

12) சீக்கிய குருத்வாரா இருந்த கிராமங்கள் இந்திய எல்லைக்குள் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இரண்டு ஆணையங்களும் எப்போது வெளியிட்டனர்?
A) 1947, ஆகஸ்ட் 3
B) 1947, ஆகஸ்ட் 6
C) 1947, ஆகஸ்ட் 9
D) 1947, ஆகஸ்ட் 12

13) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?
கூற்று 1 – ராட்கிளிஃப் எல்லைக்கோடு அடிப்படையில் எல்லைகளை வரையறுக்கும் பணியை சுதந்திரம் வழங்கப்பட்ட பின் இந்தியா – பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மேற்கொள்ளலாம் என்று மௌண்ட்பேட்டென் தீர்மானித்தார்.
கூற்று 2 – புதிய வரைபட விவரம் 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 மற்றும் 15 தெரிவிக்கப்பட்டது.
A) கூற்று 1 மட்டும் சரி
B) கூற்று 2 மட்டும் சரி
C) இரண்டு கூற்றுகளும் சரி
D) இரண்டு கூற்றுகளும் தவறு

14) மேற்கு பஞ்சாப் பாகிஸ்தானோடு இணையும் என்ற தீர்மானத்தை கீழ்க்காணும் எந்த மாகாண சட்டமன்றம் நிறைவேற்றியது?
A) பஞ்சாப்
B) சென்னை
C) பம்பாய்
D) கொல்கத்தா

15) ராட்க்ளிஃப் அளித்த திட்டத்தின்படி எந்த பகுதியின் 62 ஆயிரம் சதுர மைல்கள் கொண்ட நிலம் பாகிஸ்தானுக்கு கொடுக்கப்பட்டது?
A) பஞ்சாப்
B) குஜராத்
C) வங்காளம்
D) ஜம்மு காஷ்மீர்

16) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?
I. பழைய வங்காள மாகாணத்தின் இந்திய பகுதி, வங்காளத்தின் மொத்த முஸ்லிம் மக்கள் தொகையில் கால் பகுதி கொண்டிருந்தது
II. சர் ராட்க்ளிஃப் ஆணையம் பழைய வங்காள மாநிலத்தின் 49, 400 சதுர மைல்கள் பரப்பளவு கொண்ட நிலத்தை பாகிஸ்தானுக்கு வழங்கியது.
III. பழைய வங்காள மாநிலத்தில் 50 சதவீதம் பேர் இந்துக்கள் ஆவர்.
A) I, II மட்டும் சரி
B) I, III மட்டும் சரி
C) II, III மட்டும் சரி
D) எல்லாமே சரி

17) பங்களாதேஷ் நாடு எந்த ஆண்டில் உதயமாகியது?
A) 1970ஆம் ஆண்டு
B) 1971ஆம் ஆண்டு
C) 1972ஆம் ஆண்டு
D) 1973ஆம் ஆண்டு

18) வங்காளதேசம் நாடு உருவாக்குவதற்கு முன்னர் இந்தியாவின் கீழ்க்காணும் எந்த இடங்களை உள்ளடக்கியதாக இருந்தது?
I. அருணாச்சலம்பிரதேச மாவட்டங்கள்
II. வங்காள மாகாணத்தின் பிரிக்கப்பட்ட கிழக்குப்பகுதி
III. அஸ்ஸாமின் சில்கட் மாவட்டம்
IV.குல்னா மாவட்டம்
A) I, II, III மட்டும் சரி
B) II, III, IV மட்டும் சரி
C) I, III, IV மட்டும் சரி
D) எல்லாமே சரி

19) இந்தியாவின் பிரிவினை பற்றி "பிரிவினை" என்னும் தலைப்பில் கவிதை எழுதியவர் கீழ்க்கண்டவர்களில் யார்?
A) ரவீந்திரநாத் தாகூர்
B) W.H.ஆடன்
C) சூர்யகாந்த் திரிபாதி
D) மஹாதேவி வர்மா

20) பிரிவினைக்குப் பின்னர் இந்தியாவில் இருந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை எத்தனை?
A) 40 மில்லியன்
B) 42 மில்லியன்
C) 44 மில்லியன்
D) 46 மில்லியன்

21) 1947 – ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று பிரிவினை வன்முறைகளுக்கு தன் எதிர்ப்பை உணர்த்தும் விதத்தில் மகாத்மா காந்தி எந்த இடத்தில் உண்ணாவிரதம் இருந்தார்?
A) குஜராத்
B) பீகார்
C) ராஜஸ்தான்
D) இது எதுவும் அல்ல

22) ஆகஸ்ட் 1947 முதல் நவம்பர் 1947 வரையிலான 4 மாத காலத்தில் எத்தனை மில்லியன் மக்கள் மேற்கு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு குடிபெயர்ந்தனர்?
A) 2.5 மில்லியன்
B) 3 மில்லியன்
C) 4 மில்லியன்
D) 4.5 மில்லியன்

23) 1947 மற்றும் 1948 ஆண்டுகளில் 5 லட்சம் முஸ்லிமல்லாத அகதிகள் பஞ்சாப் மற்றும் டெல்லிக்கு இடம் பெயர்ந்தனர் என்று கூறிய வரலாற்று அறிஞர் யார்?

A) ஞானேந்திர பாண்டே
B) டி.டி.கோசாம்பி
C) சட்டோபாத்தியாயா
D) இவர்கள் யாரும் அல்ல

24) பிரிவினையின்போது எல்லையை கடப்பதற்காக நின்ற அகதிகளின் நீண்ட வரிசை எவ்வாறு அழைக்கப்பட்டது?
A) சிஃபிலா
B) கஃபிலா
C) சுஃபிலா
D) இது எதுவும் இல்லை

25) ஜவஹர்லால் நேரு மற்றும் லியாகத் அலிகான் ஆகிய இருவரும் கையெழுத்திட்ட தில்லி ஒப்பந்தம் எந்த நாளில் கையெழுத்தானது
A) 1950, ஏப்ரல் 2
B) 1950, ஏப்ரல் 4
C) 1950, ஏப்ரல் 6
D) 1950, ஏப்ரல் 8

26) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?
I. டில்லி ஒப்பந்தம் கையெழுத்தானபோதே மேற்கு பஞ்சாப்பில் இருந்து சென்றவர்களை கிழக்கு பஞ்சாபிலும், தில்லியிலும் தங்கவைத்து மறுவாழ்வு அளிப்பதற்கும், தொழில்திறன் பயிற்சி அளிப்பதற்கும், இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வந்தது.
II. பிரிவினையின்போதான வன்முறை ஏற்படுத்திய காயங்கள் பல பதிற்றாண்டுகள் கழிந்தும் ஆறவில்லை. பல்வேறு இலக்கிய படைப்புகள் பிரிவினை அதிர்ச்சியை விளக்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன.
III. டில்லி ஒப்பந்தம், 1950ஆம் ஆண்டு, ஏப்ரல் 6ஆம் நாள் ஜவாஹர்லால் நேரு மற்றும் லியாகத் அலி கான் ஆகிய இருவரிடையே கையெழுத்தானது
A) I, II மட்டும் சரி
B) II, III மட்டும் சரி
C) I, III மட்டும் சரி
D) எல்லாமே சரி

27) இந்திய அரசமைப்பின் வரைவை இந்தியர்கள் தான் உருவாக்க வேண்டும், பிரிட்டிஷ் பாராளுமன்றம் அல்ல என்ற கோரிக்கை இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக எந்த ஆண்டில் எழுப்பப்பட்டது?
A) 1933 இல்
B) 1934 இல்
C) 1935 இல்
D) 1936 இல்

28) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?
கூற்று 1 – இந்திய அரசமைப்பின் வரைவை இந்தியர்கள்தான் உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையை, 1934 – ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் அதிகாரப்பூர்வமாக எழுப்பியது.
கூற்று 2 – இந்திய அரசமைப்பின் வரைவை இந்தியர்களை உருவாக்குவார்கள் என்ற அடிப்படைக் கருத்தை 1922 களிலேயே முன்வைத்தவர் ஜவஹர்லால் நேரு ஆவார்.
கூற்று 3 – தன்னாட்சி என்பது பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இந்தியர்களுக்கு வழங்கப்படும் கொடையாக இல்லாமல், இந்தியர்களால் சுதந்திரமாக தேர்ந்தெடுக்கப்பட்ட, இந்தியர்களின் விருப்பத்தை வெளிப்படுத்தும் பிரதிநிதிகளிடம் இருந்து உருவாக வேண்டும் என்று காந்தியடிகள் கூறினார்.
A) கூற்று 1, 2 மட்டும் சரி
B) கூற்று 2, 3 மட்டும் சரி
C) கூற்று 1, 3 மட்டும் சரி
D) எல்லா கூற்றுகளும் சரி

29) மாகாண சட்டமன்றங்களுக்கான தேர்தல் எந்த ஆண்டு நடைபெற்றது?
A) 1945 இல்
B) 1946 இல்
C) 1947 இல்
D) 1948 இல்

30) எந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சொத்துரிமை உரியவருக்கு மட்டுமே வாக்குரிமை என இருந்தது?
A) 1946
B) 1952
C) 1957
D) 1962

31) அரசமைப்பு நிர்ணய சபையில் காங்கிரஸ் எத்தனை இடங்கள் பெற்றிருந்தது?
A) 220 இடங்கள்
B) 222 இடங்கள்
C) 224 இடங்கள்
D) 226 இடங்கள்

32) டாக்டர் பி ஆர் அம்பேத்கர், அரசமைப்பு நிர்ணய சபைக்கு எந்த இடத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்?
A) பம்பாய்
B) கொல்கத்தா
C) பீகார்
D) புது டில்லி

33) 1931 – ம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசின் கூட்டம் எந்த இடத்தில் நடைபெற்றது?
A) லாகூர்
B) கராச்சி
C) குஜராத்
D) மீரட்

34) இந்திய அரசமைப்புக்கான குறிக்கோள் தீர்மானத்தை அரசமைப்பு நிர்ணய சபையில் அறிமுகப்படுத்தியவர் யார்?
A) டாக்டர் அம்பேத்கர்
B) சர்தார் வல்லபாய் பட்டேல்

C) ஜவஹர்லால் நேரு

D) மௌண்ட்பேட்டன் பிரபு

35) ஜவஹர்லால் நேருவினால், இந்திய அரசின் அரசமைப்புக்கான குறிக்கோள் தீர்மானம் அரசமைப்பு நிர்ணய சபையில் அறிமுகப்படுத்தப்பட்ட நாள் எது?

A) 1946ஆம் ஆண்டு, டிசம்பர் 10

B) 1946ஆம் ஆண்டு, டிசம்பர் 11

C) 1946ஆம் ஆண்டு, டிசம்பர் 12

D) 1946ஆம் ஆண்டு, டிசம்பர் 13

36) இந்திய அரசமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டம் எப்போது நடைபெற்றது?

A) 1950, டிசம்பர் 7

B) 1950, டிசம்பர் 8

C) 1950, டிசம்பர் 9

D) 1950, டிசம்பர் 10

37) அரசமைப்பு நிர்ணய சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் கீழ்கண்டவருள் யார்?

A) ஜவஹர்லால் நேரு

B) டாக்டர் அம்பேத்கர்

C) ராஜேந்திர பிரசாத்

D) சர்தார் வல்லபாய் பட்டேல்

38) இந்திய அரசமைப்பு, அரசமைப்பு நிர்ணய சபையால் எந்த நாளில் ஏற்றுக்கொள்ளப்பட்டது?

A) நவம்பர் 26

B) டிசம்பர் 26

C) ஜனவரி 25

D) ஜனவரி 30

39) இந்திய அரசமைப்பின் அடிப்படை உரிமைகள் குறிக்கோள் தீர்மானத்தின் எந்த பிரிவில் இருந்து உருவாக்கப்பட்டது?

A) நான்காம் பிரிவில் இருந்து

B) ஐந்தாம் பிரிவில் இருந்து

C) ஆறாம் பிரிவில் இருந்து

D) ஏழாம் பிரிவில் இருந்து

40) ஐக்கிய நாடு சபையால் அனைத்துலக மனித உரிமைகள் பேரறிக்கை எந்த ஆண்டு வெளியிடப்பட்டது?

A) 1948ஆம் ஆண்டு

B) 1949ஆம் ஆண்டு

C) 1950ஆம் ஆண்டு

D) 1951ஆம் ஆண்டு

41) சுதேச அரசுகள் இந்திய ஒன்றியத்துடன் இணைக்கும் பணியின் போது கீழ்க்காணும் எந்த சுதேச அரசுகள் இணைப்பு ஆவணத்தில் (Instrument of Acession) கையெழுத்திடவில்லை?

I. காஷ்மீர்

II. ஜூனாகத்

III. ஹைதராபாத்

A) I, II மட்டும்

B) I, III மட்டும்

C) II, III மட்டும்

D) இவை அனைத்தும்

42) அனைத்திந்திய மாநில மக்கள் மாநாடு கீழ்க்காணும் எந்த ஆண்டுகளில் நடைபெற்றது?

I. டிசம்பர், 1945

II. டிசம்பர் 1946

III. ஏப்ரல், 1947

A) I, II மட்டும்

B) II, III மட்டும்

C) I, III மட்டும்

D) மூன்றும் சரி

43) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைக்கும் பணி 1947ம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதிக்குள் முடிக்கப்பட்டது.

கூற்று 2 – இந்திய ஒன்றியத்தோடு இணையும் சுதேச மன்னர்களுக்கு, தாராளமாக மன்னர் மானியங்கள் (Privy Purse to the Princes) வழங்கப்பட்டன.

கூற்று 3 – டிசம்பர் 1945, ஏப்ரல் 1947 ஆகிய ஆண்டுகளில் அனைத்திந்திய மாநில மக்கள் மாநாடு நடைபெற்றது.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

44) சுதேச அரசுகளை இந்தியாவோடு இணைக்கும் பணியை திறம்பட செய்து முடித்த அமைச்சர கீழ்கண்டவர்களில் யார்?

A) ஜவஹர்லால் நேரு

B) சர்தார் வல்லபாய் பட்டேல்

C) சர்தார் பல்தேவ் சிங்

D) ரபி அகமது கித்வாய்

45) சுதேச அரசுகளின் இணைப்பின் போது நடத்தப்பட்ட புன்னப்புரா – வயலார் ஆயுதப்போராட்டத்தின்போது திருவாங்கூர் மாநிலத்தின் திவானாக இருந்தவர் யார்?

A) சி.பி.ராமசாமி

B) ஆர்.பி.ராமசாமி

C) ஈ.வே.ராமசாமி

D) இவர்கள் யாரும் அல்ல

46) சுதேச அரசுகளின் இணைப்பின் போது நடந்த போராட்டங்களுள் அல்லாதது கீழ்க்கண்டவற்றுள் எது?

A) புன்னப்புரா – வயலார் ஆயுத போராட்டம்

B) பிரஜா மண்டல் போராட்டம்

C) மைசூர் மகாராஜாவிற்கு எதிரான போராட்டம்

D) ராஜபுத்திரர்களுக்கு எதிரான போராட்டம்

47) இணைப்புறுதி ஆவணம் (Instrument of Accession) கீழ்க்காணும் எந்த சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது?

A) இந்திய அரசாங்கச் சட்டம் 1930

B) இந்திய அரசாங்கச் சட்டம் 1935

C) இந்திய அரசாங்கச் சட்டம் 1940

D) இந்திய அரசாங்கச் சட்டம் 1945

48) சுதேச அரசுகளின் இணைப்பின் போது காஷ்மீரின் இந்து அரசராக இருந்தவர் கீழ்க்கண்டவற்றில் யார்?

A) மகாராஜா ஹரிசிங்

B) மகாராஜா வீர்சிங்

C) மகாராஜா ஹரிலால்

D) மகாராஜா ஸ்ரீராம்

49) இந்தியாவின் சுதந்திரத்திற்கு பின்னர் பாகிஸ்தானியர்கள் காஷ்மீரை எப்போது தாக்கினர்?

A) செப்டம்பர், 1947

B) அக்டோபர், 1947

C) நவம்பர், 1947

D) டிசம்பர், 1947

50) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – காலனிய ஆட்சியாளர்கள் இந்திய துணைக் கண்டத்தை நிர்வாக அலகுகளாக, அதாவது இந்திய நிலப்பரப்பு, மொழி, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் அமையாத, நிர்வாக வசதிக்காக மட்டுமே பிரிக்கப்பட்ட மாகாணங்களாக விட்டுச் சென்றனர்.

கூற்று 2 – மொழிவாரி மாநில மறுசீரமைப்பு, இந்திய அரசமைப்பு நிர்ணய சபையின் 1947 மற்றும் 1949 இடைப்பட்ட ஆண்டுகளில் எழுப்பப்பட்டு விவாதிக்கப்பட்டது.

கூற்று 3 – அரசமைப்பு நிர்ணய சபை, மொழிவாரி மாநில மறுசீரமைப்பினை பெரும்பணி என்பதற்கான காரணத்தைக் கூறி நிலுவையில் வைத்தது

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லாமே சரி

51) மொழிவாரி மாநில மறுசீரமைப்பு கொள்கை மூலம் முதன்முதலில் பிரிக்கப்பட்ட மாநிலம் எது?

A) உத்தரப் பிரதேசம்

B) கர்நாடகா

C) ஆந்திர பிரதேசம்

D) தமிழ்நாடு

52) மொழி வாரியான மாகாண காங்கிரஸ் குழுக்கள் அமைக்கப்படுவதன் மூலம் மொழி அடையாளத்தின் அடிப்படையில் அமைந்த தேசிய அடையாளம் பாதுகாக்கப்படும், என இந்திய தேசிய காங்கிரஸ் 1920ஆம் ஆண்டு எந்த இடத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போது உறுதியளித்தது?

A) நாக்பூர்

B) பம்பாய்

C) கொல்கத்தா

D) சென்னை

53) நிதி மற்றும் நிர்வாக காரணங்களுக்கு உட்பட்டு பெரும்பான்மை மக்கள் வாழும் இட அடிப்படையில் மாநிலங்களை மொழி வாரியாக அமைக்கவேண்டும் என்று ஜவஹர்லால்நேரு எந்த ஆண்டு கூறினார்?

A) 1918 ஆம் ஆண்டு

B) 1922 ஆம் ஆண்டு

C) 1924 ஆம் ஆண்டு

D) 1928 ஆம் ஆண்டு

54) கீழ்க்காணும் எந்த ஆண்டு மாகாண மற்றும் மத்திய சட்டமன்றத்துக்கு தேர்தல் நடைபெற்றது?

A) 1943ஆம் ஆண்டு

B) 1944ஆம் ஆண்டு

C) 1945ஆம் ஆண்டு

D) 1946ஆம் ஆண்டு

55) ஆந்திரா மாகாணத்திற்கான கோரிக்கையை பட்டாபி சீதாராமையா கீழ்க்காணும் எந்த நாளில் அரசமைப்பு நிர்ணய சபையின் முன் வைத்தார்?

A) 1946, ஆகஸ்ட் 1

B) 1946, ஆகஸ்ட் 11

C) 1946, ஆகஸ்ட் 21

D) 1946, ஆகஸ்ட் 31

56) பட்டாபி சீதாராமையா கீழ்க்காணும் எந்த நாளில் நடைபெற்ற மாநாட்டில் தலைமை தாங்கிய போது நிறைவேற்றிய தீர்மானத்தில் மொழிவாரி மாநில மறுசீரமைப்பு கொள்கையை அரசமைப்பு நிர்ணய சபை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தினார்?

A) 1946, டிசம்பர் 2

B) 1946, டிசம்பர் 4

C) 1946, டிசம்பர் 6

D) 1946, டிசம்பர் 8

57) 1948ஆம் ஆண்டில் மூவர் ஆணையம் அமைக்கப்பட்டபோது அரசமைப்பு நிர்ணய சபை தலைவராக இருந்தவர் கீழ்க்கண்டவர்களில் யார்??

A) ஜவஹர்லால் நேரு

B) இராஜேந்திர பிரசாத்

C) அம்பேத்கர்

D) சர்தார் வல்லபாய் பட்டேல்

58) கீழ்க்காணும் எந்த நாளில் இராஜேந்திரபிரசாத் அவர்களால் மூவர் ஆணையம் அமைக்கப்பட்டது?

A) 1948, ஜூன் 7

B) 1948, ஜூன் 11

C) 1948, ஜூன் 17

D) 1948,, ஜூன் 23

59) மூவர் ஆணையம் கீழ்க்காணும் எந்த நாளில் தனது அறிக்கையை சமர்ப்பித்தது?

A) 1948, டிசம்பர் 2

B) 1948, டிசம்பர் 5

C) 1948, டிசம்பர் 7

D) 1948, டிசம்பர் 10

60) மூவர் ஆணையம் கீழ்க்காணும் எந்த மாநிலத்தை புதிய மொழிவாரி மாகாணமாக உருவாக்குவதைப் பற்றி ஆராயவில்லை?

A) ஆந்திரம்

B) தமிழகம்

C) கேரளம்

D) கர்நாடகம்

61) கீழ்க்காணும் எந்த இடத்தில் நடைபெற்ற மாநாட்டில் பட்டாபி சீதாராமையா இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?

A) நாக்பூர்

B) ஜெய்ப்பூர்

C) கான்பூர்

D) மிர்பூர்

62) ஜேவிபி குழு தனது அறிக்கையை கீழ்க்காணும் எந்த நாளில் சமர்ப்பித்தது?

A) 1948, ஏப்ரல் 1

B) 1949, ஏப்ரல் 1

C) 1948, ஏப்ரல் 11

D) 1949, ஏப்ரல் 11

63) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – ஜேவிபி குழு, " மொழியானது பிணைக்கும் ஆற்றலை கொண்டிருப்பதோடு பிரிக்கும் ஆற்றலும் உடையது" என்று குறிப்பிட்டது.

கூற்று 2 – மொழிவாரி மாநிலங்கள் குறுகிய பிராந்தியவாதத்தை வலியுறுத்துகின்றன என்றும், அது நாட்டின் மேம்பாட்டிற்கு அச்சுறுத்தலாக உருவாகக் கூடும் என்றும் ஜேவிபி குழு தெரிவித்தது.

கூற்று 3 – ஜேவிபி குழு தனது அறிக்கையில் 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் 11ஆம் நாள் சமர்ப்பித்தது.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

64) ஆந்திரா தனி மாநிலமாக பிரிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி 1952 ஆம் ஆண்டு சாகும்வரை உண்ணாவிரதத்தை தொடங்கியவர் கீழ்கண்டவர்களில் யார்?

A) பிங்காலி வெங்கையா

B) பொட்டி ஸ்ரீராமுலு

C) பட்டாபி சீதாராமையா

D) இவர்கள் யாரும் அல்ல

65) இந்திய அரசமைப்பின் எந்த உறுப்பு நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் ஒரு மாநிலத்தை நிலத்தின் அடிப்படையில் அதிகரிக்கவும், குறைக்கவும், எல்லைகளை மாற்றி அமைக்க முடியும் என்பதை கூறுகிறது?

A) உறுப்பு 2

B) உறுப்பு 3

C) உறுப்பு 5

D) உறுப்பு 7

66) மாநில மறுசீரமைப்பு ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

A) சர்தார் வல்லபாய் பட்டேல்

B) கே.எம்.பணிக்கர்

C) எச்.என்.குன்ஸ்ரூ

D) பசல் அலி

67) பசல் அலி தலைமையிலான மாநில மறுசீரமைப்பு ஆணையம் தனது அறிக்கையை கீழ்க்காணும் எந்த ஆண்டில் சமர்ப்பித்தது?

A) 1953ஆம் ஆண்டு

B) 1955ஆம் ஆண்டு

C) 1957ஆம் ஆண்டு

D) 1959ஆம் ஆண்டு

68) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. பசல் அலி தலைமையிலான மாநில மறுசீரமைப்பு ஆணையம், மதராஸ், கேரளம், கர்நாடகம், ஹைதராபாத், ஆந்திரம், பம்பாய், விதர்பா, மத்திய பிரதேசம், ராஜஸ்தான், பஞ்சாப், உத்திரப்பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம், அஸ்ஸாம், ஒரிசா மற்றும் ஜம்மு – காஷ்மீர் ஆகியவைகளை உள்ளடக்கியதுதான் இந்திய யூனியன் என அறிவித்தது.

II. பசல் அலி தலைமையிலான மாநில மறுசீரமைப்பு ஆணையத்தின் பரிந்துரைகள் நிர்வாக காரணங்கள் மற்றும் மொழிவாரி மாகாணம் கோரிக்கைகள் ஆகியவற்றுக்கு இடையேயான சமாதான நடவடிக்கைகளாக அமைந்தன.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

69) கீழ்க்காணும் எந்த ஆண்டில் குஜராத் மாநிலம் உருவாக்கப்பட்டது?

A) 1960ஆம் ஆண்டு

B) 1961ஆம் ஆண்டு

C) 1962ஆம் ஆண்டு

D) 1963ஆம் ஆண்டு

70) 1966 ஆம் ஆண்டு பஞ்சாப் மாகாணம் மூன்று மாநிலங்களாக பிரிக்கப்பட்டது. அவற்றுள் அல்லாதது கீழ்க்கண்டவற்றுள் எது?

A) பஞ்சாப்

B) ஹரியானா

C) இமாச்சலப்பிரதேசம்

D) உத்தராகண்ட்

71) இந்திய வெளியுறவுக் கொள்கையின் முதன்மையான சிற்பி எனக் கருதப்படுபவர் கீழ்க்கண்டவர்களில் யார்?

A) சர்தார் வல்லபாய் பட்டேல்

B) ராஜேந்திர பிரசாத்

C) ஜவஹர்லால் நேரு

D) டாக்டர் அம்பேத்கர்

72) கீழ்க்கண்டவற்றில் எது இந்திய வெளியுறவு கொள்கையின் அடிப்படை கோட்பாடுகள் அல்ல?

A) ஏகாதிபத்திய எதிர்ப்பு

B) இன ஒதுக்கலை எதிர்த்தல்

C) இனவெறியை எதிர்த்தல்

D) வல்லரசு நாடுகளுடன் அணி சேர்தல்

73) சீனா தன்னை ஜப்பானிய காலனிய விரிவாக்கத்தில் இருந்து விடுவித்துக் கொண்ட ஆண்டு எது?

A) 1948ஆம் ஆண்டு

B) 1949ஆம் ஆண்டு

C) 1950ஆம் ஆண்டு

D) 1951ஆம் ஆண்டு

74) இந்தியா எந்த ஆண்டு சீன மக்கள் குடியரசை அங்கீகரித்தது?

A) 1950 இல்

B) 1951 இல்

C) 1952 இல்

D) 1953 இல்

75) 1950ஆம் ஆண்டு திபெத்தை கீழ்க்காணும் எந்த நாடு ஆக்கிரமித்தது?

A) நேபாளம்

B) மியான்மர்

C) பாகிஸ்தான்

D) சீனா

76) நேரு வகுத்த பஞ்சசீலக் கொள்கைகளில் அல்லாதது எது?

A) இரு நாடுகளும் ஒன்றை ஒன்று ஆக்கிரமிக்காமல் இருத்தல்

B) இரு நாடுகளுக்கு இடையே ஆன சமத்துவம் மற்றும் ஒன்றுகொன்று பயன் அடைவதற்கான கூட்டுறவு

C) ஒரு நாடு மற்றொரு நாட்டின் உள் நிகழ்வுகளில் தலையிடாமல் இருத்தல்

D) ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் வணிகம் செய்தல்

77) பாண்டுங் மாநாடு எந்த ஆண்டு நடைபெற்றது?

A) 1954 இல்

B) 1955 இல்

C) 1956 இல்

D) 1957 இல்

78) சீனா லடாக்கில் உள்ள கொங்காய் கணவாயில் காவல் இருந்த இந்தியப் படை மீது எந்த ஆண்டு தாக்குதல் நடத்தியது?

A) அக்டோபர், 1958இல்

B) அக்டோபர், 1959இல்

C) அக்டோபர், 1960இல்

D) அக்டோபர், 1961இல்

79) இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான போர் எந்த ஆண்டு நிகழ்ந்தது?

A) 1962 இல்

B) 1963 இல்

C) 1964 இல்

D) 1965 இல்

80) 1947 ஆம் ஆண்டு மார்ச் மாதம் டெல்லியில் ஆசிய உறவுக்கான மாநாட்டை ஏற்பாடு செய்தவர் யார்?

A) மகாத்மா காந்தி

B) சுபாஷ் சந்திர போஸ்

C) ஜவஹர்லால் நேரு

D) டாக்டர் அம்பேத்கர்

81) ஆசிய உறவுக்கான மாநாடு 1948ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எந்த இடத்தில் நடைபெற்றது?

A) இந்தியா

B) சீனா

C) இந்தினேஷியா

D) நேபாளம்

82) 1961 ஆம் ஆண்டில் அணுசக்தி ஆயுதக் குறைப்பு மற்றும் சமாதானத்திற்காக அழைப்பு விடுத்தவர்கள் அல்லாதவர் கீழ்க்கண்டவர்களில் யார்?

A) இந்தியாவின் ஜவஹர்லால் நேரு

B) எகிப்தின் நாசர்

C) யூகோஸ்லாவியாவின் டிட்டோ

D) சீனாவின் சூ – யென் – லாய்

83) பொருத்துக

I. ஜேவிபி குழு அறிக்கை – A) 1947, ஜூன் 3

II. பசல் அலி குழு அறிக்கை – B) 1949, ஏப்ரல் 1

III. நேரு தீர்மானம் – C) 1955, அக்டோபர்

IV. மௌண்பேட்டன் அறிக்கை – D) 1946, டிசம்பர் 13

A) I – b, II – c, III – d, IV – a

B) I – b, II – a, III – d, IV – c

C) I – d, II – a, III – b, IV – c

D) I – c, II – a, III – b, IV – d

84) மாநிலங்கள் உருவான ஆண்டினை பொருத்துக

I. ஆந்திர பிரதேசம் – A) 2000ஆம் ஆண்டு

II. ஹரியானா – B) 1987ஆம் ஆண்டு

III. சத்தீஸ்கர் – C) 1966ஆம் ஆண்டு

IV. கோவா – D) 1956ஆம் ஆண்டு

A) I – d, II – c, III – a, IV – b

B) I – b, II – a, III – c, IV – d

C) I – c, II – b, III – a, IV – d

D) I – b, II – a, III – c, IV – d

85) பொருத்துக

I. ராட்கிளிஃப் – A) ஜேவிபி குழு

II. ஜவஹர்லால் நேரு – B) பசல் அலி குழு

III. எச்.என்.குன்ஸ்ரூ – C) எல்லை வரையறை

IV. வல்லபாய் பட்டேல் – D) பஞ்சசீல கொள்கை

A) I – c, II – d, III – b, IV – a

B) I – b, II – a, III – d, IV – c

C) I – c, II – b, III – d, IV – a

D) I – a, II – d, III – c, IV – b

winmeen.com